(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 5(2).]

# பாராளுமன்றம்

## 5 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2016 திசெம்பர் 21 புதன்கிழமை வெளியிடப்பட்டது

## 2017 பெப்ரவரி 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

634/ '16

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத ஆட்கள் முறைசார்ந்த ஆட்சேர்ப்பு நடைமுறையின்றி வன்னி மாவட்டத்தின் சமுர்த்தி உத்தியோகத்தர்களாக ஆட்சேர்க்கப்பட்டுள்ளனரென்பதை அறிவாரா;

(ii) அவ்விதமாக தகைமைகளின்றி ஆட்சேர்க்கப்பட்டுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தகவல்கள் யாவை;

(iii) முறைசாரா விதத்தில் நியமிக்கப்பட்டுள்ள ஆட்களை சேவையிலிருந்து அகற்றி முறைசார்ந்த விதத்தில் புதிதாக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு துரித நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

864/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் செயற்பாட்டுப் பணிப்பாளர் ஒருவராக திரு. சந்தன பெல்பிட்ட சேவையாற்றுகின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவரது சம்பளம், கொடுப்பனவுகள், வழங்கப்பட்டுள்ள வாகனங் களுக்கான மாதாந்த வாடகை ஆகியன தனித்தனியே யாது என்பதையும்;

(iii) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் 2015 நவம்பர் 06 ஆம் திகதியிடப்பட்ட PCI/52/2015 ஆம் இலக்க மனுவின் கீழ் கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திரு. சந்தன பெல்பிட்ட இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தானத்தின் பிரதிப் பொது முகாமையாளராக சேவையாற்றிய காலத்தில் மேற்கொண்டுள்ள பாரிய நிதி மோசடிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நிதி மோசடிகள் தொடர்பிலான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சிபாரிசுகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்ட திகதி யாது என்பதையும்;

(vii) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சிபாரிசுகள் அமுல்படுத்தப்படவில்லை எனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

899/ '16

கௌரவ சமல் ராஜபக்ஷ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரவில மற்றும் யோதகண்டிய கமநல சேவை நிலையங்களின் ஆளுகைப் பிரதேசங்களிலிருந்து உர மானியத்திற்கு விண்ணப்பித்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) இவ்விவசாயிகளில் உர மானிய நிதித்தொகை வழங்கப்பட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) உர மானிய நிதித்தொகை வழங்கப்படவுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) உர மானிய நிதித்தொகை கிடைக்காத விவசாயிகளுக்கு நிதி வழங்குவதற்கு உத்தேசமாயுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1039/ '16

கௌரவ கனக்க ஹேரத்,— சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் வாழ்க்கை உதவிப்படிக் கொடுப்பனவு வழங்கப்பட்ட வலதுகுறைந்த ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டில் வலதுகுறைந்த ஆட்களுக்கு வாழ்க்கை உதவிப்படிக் கொடுப்பனவாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியளவில் புதிதாக விண்ணப்பித்திருந்த வலதுகுறைந்த ஆட்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இக் கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறாத வலதுகுறைந்த ஆட்கள் உள்ளனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், கேகாலை மாவட்டத்தில் உள்ள அவ்வாறான வலதுகுறைந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஆட்களுக்கு இந்த ஆண்டில் கொடுப்பனவுகள் வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1063/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015.01.08 ஆம் திகதியன்று உள்ளவாறு சமுர்த்தி பெறுனர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சமுர்த்தி ஆய்வறிக்கைக்கு அமைய ஒட்டுமொத்த சமுர்த்தி பெறுனர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கைக்கு அமைய ஒவ்வொரு மாவட்டத்தினதும் சமுர்த்தி பெறுனர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி அறிக்கைக்கு அமைய சமுர்த்தி உதவி வழங்குதல் நிறுத்தப்படும் குடும்பங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், சமுர்த்தி உதவி வழங்குதல் நிறுத்தப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1100/ ’16

கௌரவ அசோக்க பிரியந்த,— சுகாராரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களிலுள்ள தெலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி நோயாளர்கள் வசித்து வருகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) தெலசீமியா நோய்க்கு ஆளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான சத்திரசிகிச்சைக்கூடம் மற்றும் மரபணு வங்கியொன்று வடமேல் மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி நோயாளர்களுக்கான சிகிச்சை மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக் கொடுக்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1218/ ’16

கௌரவ டளஸ் அழகப்பெரும,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடத்தப்படாது கடந்துள்ள காலம் 1½ ஆண்டுகளைத் தாண்டியுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(ii) புதிய உள்ளூராட்சி சபை தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம், கடந்த அரசாங்கத்தினால் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்ட திகதி; ஆணைக்குழுவின் காலம் முடிவடைந்த திகதி மற்றும் மேற்படி ஆணைக்குழுவின் விதப்புரைகள் ஆராயப்பட்டதன் பின்னர் புதிய எல்லை நிர்ணயத்துடன் கூடிய தொகுதிகள் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போதைய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணய சபை நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு கிடைத்திருந்த திருத்தங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த திருத்தங்களை சமர்ப்பித்த திகதிகள், ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) சரியாக நிர்ணயிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அற்ற உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசங்களுக்கான தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2017 பெப்ரவரி 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

384/ '15

கௌரவ புத்திக பத்திரண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கை மின்சார சபைக்குத் தேவையான மின்மாற்றிகளைப் பெற்றுக் கொள்ளும்போது கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டபோது முன்வந்த நிறுவனங்கள் ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களால் முன்வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களின் பெறுமதி தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்களில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது இலங்கை மின்சார சபைக்கு மின்மாற்றிகளை வழங்கும் நிறுவனம் யாதென்பதையும்;

(ii) அந்த நிறுவனத்தின் உரிமையாளர்/ உரிமையாளர்கள் மற்றும்/ அல்லது பணிப்பாளர் சபையினர் யாவர் என்பதையும்;

(iii) இவர்கள் இலங்கை மின்சார சபையில் வகிக்கின்ற பதவிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மின்மாற்றிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் கேள்விப்பத்திரம் கோரப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(ii) அதன்போது ஏனைய கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களைக் குறைப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

918/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கென்வில் ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனி (Canwill Holdings (Pvt.) Ltd.) ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதன் பங்குரிமையாளர்கள் யாரென்பதையும்;

(iii) மேற்படி பங்குரிமையாளர்கள் கம்பனி ஆரம்பிக்கப்படுகையில் முதலீடு செய்துள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கம்பனியின் ஆரம்பகால பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாரென்பதையும்;

(v) ஆரம்பகால பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் சம்பளம் மற்றும் படிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் இணைக்கம்பனிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி இணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாரென்பதையும்;

(iii) இவர்களது சம்பளம் மற்றும் படிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

943/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புளுமெண்டல் மற்றும் மீதொட்டமுல்ல ஆகிய இடங்களில் திரண்டுள்ள கழிவுகளை புகையிரதம் மூலம் எடுத்துச் சென்று வனாதவில்லுவ, அருவக்களு பிரதேசத்தில் 80 ஏக்கர் காணியில் துப்புரவேற்பாட்டு ரீதியிலான நிரப்பலை மேற்கொள்ள திட்டமிடப்பட்டதென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்தின் ஊடாக கொலன்னாவ, மீதொட்டமுல்லவில் குப்பைகூள பரிமாற்ற நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு, புகையிரத பாதைகளை மேம்படுத்துவதற்கு மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டதென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் இக்கருத்திட்டத்திற்கு ரூபா 14,000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததென்பதையும்;

(iv) 2014 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் கருத்திட்டத்தின் முதல் 02 கட்டங்களின் பெறுகைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதெனில், அதற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

958/ ‘16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ருகுணு பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கிவரும் பீடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அங்கு இயங்கிவரும் திணைக்களங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) ஒவ்வொரு பீடத்திலும் மற்றும் திணைக்களத்திலும் இருக்கவேண்டிய நிரந்தர விரிவுரையாளர் குழாம் வெவ்வேறாக யாதென்பதையும்,

(iv) நிரந்தர விரிவுரையாளர் குழாமில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்தின்படியும் திணைக்களத்தின்படியும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1040/ '16

கௌரவ கனக ஹேரத்,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவினுள் நீர்க் குழாய்களை நீடிப்பதற்காகவும் புதிய இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது;

(ii) இதுவரையில் வழங்கப்பட்டுள்ள நீர்க் குழாய் நீடிப்புக்கள் மற்றும் புதிய இணைப்புக்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை போதியதாக இல்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) ரபுக்கனை பிரதேச செயலாளர் பிரிவில், வல்கம சந்தியிலிருந்து தொம்பேமட வீதியிலான நீர்க் குழாய் நீடிப்பு, கட்டுபிட்டிய வீதியிலான நீர்க் குழாய் நீடிப்பு, நாரம்பெந்த வீதியிலான நீர்க் குழாய் நீடிப்பு, பரப்பே வீதியிலான நீர்க் குழாய் நீடிப்பு மற்றும் முவபிட்டிய ஹலாகிரிய வீதியிலான நீர்க் குழாய் நீடிப்புக்களை முன்னெடுப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1041/ '16

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சப்புமல்தென்ன, வெலிஓய பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இந்த உத்தியோகத்தர்களில் இராணுவ சேவையில் ஈடுபட்டுள்ள 13 பேருக்கு வீடமைப்புக் கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாது;

(iii) மேற்படி 13 பேருக்கும் வீடமைப்புக் கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

1107/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) SLFR891/2009 ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பின் மூலம் 2009.10.20 ஆம் திகதி தொடக்கம், அதாவது நடைமுறையில் இருந்த ஹோமியோபதி மருத்துவ சபை அகற்றப்பட்ட நாள் தொடக்கம் அமைச்சரினால் புதியதொரு மருத்துவ சபை நியமிக்கப்படுதலும், அம்மருத்துவ சபையின் மூலம் மருத்துவர்களை பதிவு செய்தல் மற்றும் வழங்கப்பட்ட நியமனங்களும் அனைத்து செயற்பாடுகளும் வலுவற்றதாகக் கருதப்பட வேண்டும் எனக் கூறப்பட்டதா என்பதையும்;

(ii) மேலே கூறப்பட்ட வழக்குத் தீர்ப்புத் தினமான 2016.03.31ஆம் திகதி தொடக்கம் மனுதாரர்களைப் பிரதிநிதிப்படுத்தும் மேற்படி மருத்துவ சபைக்கு 1½ வருடகாலம் சட்டபூர்வமான மருத்துவ சபையாக செயலாற்றுவதற்கு உரிமையுண்டு என தெளிவுபடுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) அதன் பிரகாரம், அமைச்சரினால் இவ்விடயத்துடன் தொடர்புடைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோத நியமனங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை கடந்த காலத்துக்கு ஏற்புடையவாறு அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) புதிய சட்டத்தின்படி இடைக்கால மருத்துவ சபைக்கான நியமனங்களை மேற்கொள்கின்றபோது அமைச்சரினால் நியமிக்கக்கூடியதான பதவிகளுக்கு இவ்வழக்கின் மனுதாரர்களை நியமித்து பிரச்சினையைத் தீர்ப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1109/ '16

கௌரவ ரி. ரஞ்ஜித் த சொய்சா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமக்காரர் வாரத்தை முன்னிட்டு 2016 ஒக்தோபர் மாதம் 08ஆம் திகதி "கமக்காரர் தினம்" என்ற பெயரில் வைபவமொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அந்த வைபவம் நடாத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வைபவம் நடாத்தப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iv) அதன் மூலம் நாட்டிலுள்ள கமக்காரர்கள் அடைந்த நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கமக்காரர் தின வைபவத்தின் சார்பில் தாய்மாருக்கு (கிரி அம்மா) தானம் வழங்குதல் இடம்பெற்றதா என்பதையும்;

(ii) இதில் பங்குபற்றிய தாய்மார்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) கமக்காரர் வாரம் மற்றும் தாய்மாருக்கான தானம் வழங்கலுக்காக அரசின் நிதி செலவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அதற்காக செலவிடப்பட்ட மொத்த அரச நிதித்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2017 பெப்ரவரி 09, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

387/ '15

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவத்துக்கு தேகப்பயிற்சிகளுக்குத் தேவையான கன்வஸ் பாதணிகளை கொள்வனவு செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் சமர்ப்பித்திருந்த கேள்விப்பத்திரங்களின் பெறுமதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் மேற்படி பாதணி கொள்வனவுடன் தொடர்புடைய, பாதுகாப்பு அமைச்சின் கேள்விப்பத்திர சபையில் இருந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்கள் கேள்விப்பத்திர சபையில் எவ்வளவு காலமாக பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

(iii) 2015 ஆண்டில் மேற்படி பாதணி கொள்வனவுடன் தொடர்புடைய, இராணுவத்தின் கேள்விப்பத்திர சபையில் இருந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்கள் கேள்விப்பத்திர சபையில் எவ்வளவு காலமாக பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பாதுகாப்பு அமைச்சின் மற்றும் இராணுவத்தின் கேள்விப்பத்திர சபைகளில் தொடர்ச்சியாக பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்திகதியில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

919/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொள்ளுப்பிட்டி, ஹயற் ஹோட்டல் (Hyatt Hotel) தொகுதி நிர்மாணிக்கப் படுகின்ற காணியின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணி பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பது குத்தகை அடிப்படையிலா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எந்த நிறுவனத்திடமிருந்து எவ்வளவு காலத்திற்காக என்பதையும்;

(iv) அக்காணியின் விலைமதிப்பீட்டுப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி காணி குத்தகைக்குப் பெறப்பட்ட பெறுமதி எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஹோட்டலை நிர்மாணிக்க கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) முன்வந்துள்ள ஒப்பந்தகாரர்களும் அவர்கள் முன்வைத்த விலைகளும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) நிர்மாணிப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(v) அதற்காக வைபவமொன்று நடத்தப்பட்டதா? ஆமெனில், அதற்கான செலவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நிர்மாணிப்பிற்காக வெளிநாட்டு பொறியியல் ஆலோசனைச் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அதற்காக செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

959/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கிவரும் பீடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அங்கு இயங்கிவரும் திணைக்களங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பீடத்திலும் மற்றும் திணைக்களத்திலும் இருக்கவேண்டிய நிரந்தர விரிவுரையாளர் குழாம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிரந்தர விரிவுரையாளர் குழாமில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்தின்படியும் திணைக்களத்தின்படியும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

998/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1972 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தமிழ் பிரிவினைவாத பயங்கரவாதம் காரணமாக மரணமடைந்த மற்றும் காயமடைந்த இலங்கை பொலிஸ் படையினரின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1108/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு 07, மேயிற்லன்ட் பிளேஸ், இல. 55/2/T/85 இல் வசிக்கும் ஏ. சமீர புஷ்பகுமார என்பவரின் பிள்ளையை சகோதரர் என்ற அடிப்படையில் கொழும்பு றோயல் கல்லூரியில் 1 ஆம் தரத்திற்கு அனுமதிப்பதற்காக விண்ணப்பித்த பின்னர் நேர்முகப் பரீட்சைக்கு 62 புள்ளிகள் வழங்கப்பட்டதையும்;

(ii) சகோதரர் அடிப்படையில் அனுமதிப்பத்திரத்திற்குத் தேவைப்படும் புள்ளிகள் 44 என்ற போதிலும், மேற்கூறியவரின் பிள்ளை 62 புள்ளிகளைப் பெற்றிருந்தும் அனுமதிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இந்தப் பிள்ளைக்கு ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பாக கருத்திற்கொண்டு இவரை றோயல் கல்லூரியின் 1 ஆம் தரத்திற்கு அனுமதிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இந்த சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1111/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக பதுளை மாவட்ட மக்கள் பாரியளவில் இன்னல்களை எதிர்கொண்டுள்ளமையை ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இன்னல்களைச் சந்தித்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் உரித்தாகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கு முன்னர் சுற்றாடல் சாத்தியவள அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1140/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோகபூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஏறாவூர் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1151/ '16

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு பிரதேசத்திலிருந்து அகற்றப்படும் குப்பைகூளங்களை ஜா-எல பிரதேசத்திற்கு கொண்டுசென்று கொட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நடவடிக்கையின் காரணமாக பிரதேசத்தின் நீர் மூலங்களுக்கும் மற்றும் மக்கள் வாழ்க்கைக்கும் பாரிய பாதிப்பு ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஜா-எல பிரதேச மக்களுக்கு பாரிய நெருக்கடியைக் கொடுக்கின்றதான இக் கருத்திட்டத்தை நிறுத்திவிட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1168/ '16

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாவலபிட்டிய தேர்தல் ஆளுகைப் பிரதேசத்திற்கு சொந்தமான உலபனையில் அமைந்துள்ள கைத்தொழில்பேட்டையை ஆரம்பிப்பதற்காக கடந்த அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாது என்பதையும்;

(ii) அங்கு எத்தனை தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவந்தன என்பதையும்;

(iii) தற்போது மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழிற்பேட்டையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான புதிய வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1264/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நிதி அமைச்சரின் அமைச்சர் பணியாட்டொகுதிக்கு நியமிக்கபட்டுள்ள,

(i) ஒருங்கிணைப்புச் செயலாளர்களின்;

(ii) ஆலோசகர்களின்;

(iii) ஏனைய பணியாட்டொகுதியினரின்;

எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மொத்த பணியாட்டொகுதியினருக்காக மாதமொன்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள படிகள், சம்பளம், வாகனங்கள், எரிபொருள் மற்றும் ஏனைய சகல சிறப்புரிமைகள் உள்ளடங்கிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

539/ '16

கௌரவ புத்திக பத்திரண,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையில் கறுவா பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பு எவ்வளவு;

(ii) 2010 தொடக்கம் 2015 வரையான ஐந்து வருட காலப்பகுதியில் கறுவா உற்பத்தி ஆண்டுவாரியாக வெவ்வேறாக எத்தனை கிலோகிறாம்;

(iii) அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கறுவாவை கொள்வனவு செய்கின்றதா;

(iv) ஆமெனில், கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட கறுவாவின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) கறுவா உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

960/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கிவரும் பீடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அங்கு இயங்கிவரும் திணைக்களங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பீடத்திலும் மற்றும் திணைக்களத்திலும் இருக்கவேண்டிய நிரந்தர விரிவுரையாளர் குழாம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிரந்தர விரிவுரையாளர் குழாமில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்தின்படியும் திணைக்களத்தின்படியும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1000/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 மே 19 ஆம் திகதியளவில் வட மாகாணத்தில் காணப்பட்ட தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை முகாம்களின் எண்ணிக்கை, இவற்றின் நிலப் பரப்பளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) 2015 சனவரி 08 ஆம் திகதியளவில் வட மாகாணத்தில் காணப்பட்ட தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை முகாம்களின் எண்ணிக்கை, இவற்றின் நிலப் பரப்பளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) 2016 செத்தெம்பர் 30 ஆம் திகதியளவில் வட மாகாணத்தில் காணப்பட்ட தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை முகாம்களின் எண்ணிக்கை, இவற்றின் நிலப் பரப்பளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1131/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) டாக்டர் நெவில் பர்னாந்து முதலீட்டு தனியார் நிறுவனம் இலங்கையினுள் மருத்துவ பட்டத்தை வழங்குவதற்காக அனுமதி கோரியுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கை முதலீட்டுச் சபை இதற்கு அனுமதி வழங்கியுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iv) அனுமதியளிக்கும் கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ரஷ்யாவின், நிஷ்னி நொவ்கொரொத் அரச மருத்துவ கல்லூரியுடன் (Nizhny Novgorod State University) இணைந்து பட்டம் வழங்கும் நிறுவனமொன்றை இலங்கையினுள் நிறுவுவதற்கு இந்நிறுவனம் அனுமதி கோரியுள்ளதா என்பதையும்;

(ii) இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iv) அனுமதியளிக்கும் கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) South Asian Institute of Technology and Management என்ற நிறுவனம் South Asian Institute of Technology and Medicine என தமது நிறுவனத்தின் பெயரை மாற்றியமை பற்றி இலங்கை முதலீட்டுச் சபைக்கு அறிவித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

582/ '16

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2008.01.09 ஆம் திகதி முதல் 2008.04.09 ஆம் திகதி வரை நடைபெற்ற உணவு மற்றும் ஔடத பரிசோதகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான மூன்றுமாத கால பயிற்சிப் பாடநெறியில் பங்கேற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் பெயர், முகவரி, மாகணங்கள், மற்றும் சேவை நிலையங்கள் யாவையென்பதையும்;

(iii) இப்பாடநெறியின் இறுதியில் எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சைகள் நடாத்தப்பட்ட திகதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) செய்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்கான வெட்டுப்புள்ளிகள் யாதென்பதையும்;

(v) இவ்வெட்டுப்புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் இவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) பரீட்சையில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட திகதி, ஒவ்வொரு உத்தியோகத்தருக்குமேற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?